வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959　Reg. No. : P . 1632　விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu　ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com　மலர் : 07　09.05.2026 சனிக்கிழமை　இதழ் : 123　பக்கங்கள் : 08




# பெரும்பான்மை பெற்றது தமிழக வெற்றிக் கழகம்!

- கம்யூனிஸ்ட், விடுதலை சிறுத்தைகள், முஸ்லிம் லீக் ஆதரவு
- இன்று தமிழக முதலமைச்சராக விஜய் பதவிப்பிரமாணம்

சென்னை, மே. 09

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் ஆட்சி அமைப்பதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலை சிறுத்தைகள் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகியன தமது உத்தியோகபூர்வ ஆதரவை வழங்கியுள்ளன.

இதனால் பெரும்பான்மை பெற்றுள்ள தமிழக வெற்றிக் கழகம் ஆட்சியமைப்பதற்கான தகுதியை பெற்றுள்ளது.

தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் சந்திரசேகர் ஜோசப் விஜய், தமிழகத்தின் அடுத்த முதலமைச்சராக

07



## மயிலிட்டியில் தொடரும் போராட்டம்!



யாழ்ப்பாணம், மே. 09


வலி. வடக்கு பகுதிகளில் உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள தமது காணிகளை விடுவிக்க கோரி , காணி உரிமையாளர்கள் இராணுவத்தினரின் அதிகாரிகள் பங்களா முன்பாக நேற்று வெள்ளிக்கிழமை மூன்றாவது தடவையாக போராட்டத்தை முன்னெடுத்தனர்.

வலி. வடக்கில் 256, 248, 251 மற்றும் 255 ஆகிய கிராம சேவையாளர் பிரிவை சேர்ந்த மக்கள் கடந்த 1990ஆம் ஆண்டு ஜூன் மாத கால பகுதியில் அவர்களது சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட பின்னர், அப்பகுதி உயர் பாதுகாப்பு வலயமாக காணப்படுகிறது

07

## இலங்கையின் மிகப்பெரும் வர்த்தக பங்காளியாக தொடர்கிறது இந்தியா

### இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா பெருமிதம்



கொழும்பு, மே. 09

இலங்கையின் முதன்மையான வர்த்தகப் பங்காளி சீனா தான் என்று இந்தியாவில் உள்ள சீனத் தூதரகத்தின் செய்தித் தொடர்பாளர் உரிமை கோரியதைத் தொடர்ந்து, இலங்கையின் மிகப்பெரிய வர்த்தகப் பங்காளியாக இந்தியாவே தொடர்கிறது என்பதை இந்தியா மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

07

## சிறீலங்கன் எயார்லைன்ஸ் முன்னாள் நிறைவேற்று அதிகாரி சடலமாக மீட்பு!

### கொழும்பில் பெரும் பரபரப்பு



கொழும்பு, மே. 09

பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த சிறீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரி கபில சந்திரசேன, சடலமாக மீட்கப்பட்டுள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கொள்ளுப்பிட்டி பகுதியில் உள்ள வீட்டில் வைத்தே நேற்று அவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது.

07

## வியட்நாம்-இலங்கை இடையே 5 புரிந்துணர்வு உடன்பாடுகள்!

கொழும்பு, மே. 09

வியட்நாம் மற்றும் இலங்கை இடையே பல்வேறு துறைகள் சார்ந்து கைச்சாத்திடப்பட்ட 5 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பரிமாறிக் கொள்ளும் நிகழ்வு, இலங்கை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மற்றும் வியட்நாம் சோசலிசக் குடியரசின் ஜனாதிபதியும் வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவின் பொதுச் செயலாளருமான டோ லாம் ஆகியோர் முன்னிலையில் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

07

## கபில சந்திரசேனவின் மரணத்தில் சந்தேகம்!

### பொலிஸார் நீதிமன்றில் அறிக்கை

கொழும்பு, மே. 09

சிறீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் நிறைவேற்று அதிகாரி கபில சந்திரசேன சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.கொழும்பு கொள்ளுப்பிட்டிய, பேதிரிஸ் மாவத்தை

07

## கோட்டாபயவுக்கு மீண்டும் அறிவிப்பு அனுப்ப உத்தரவு

கொழும்பு, மே. 09

அரசியல்வாதிகளுக்கு நட்டஈடு வழங்கப்பட்டமையை சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மனுவின் ஒரு பிரதிவாதியாக பெயரிடப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு மீண்டும் அறிவித்தல் அனுப்புமாறு உயர்நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

2022ஆம் ஆண்டு மே மாதம் 9ஆம் திகதி "அரகலய" போராட்டக்களத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து, நாடு

07

## குருநாகல் மாநகர சபை பிரதி மேயர் இலஞ்ச ஆணைக்குழுவினரால் கைது!

கொழும்பு, மே. 09

தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைத்துள்ள குருநாகல் மாநகர சபையின் பிரதி முதல்வர், பத்தரமுல்லை பகுதியில் வைத்து இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

30 இலட்சம் ரூபா இலஞ்சப் பணத்தைப் பெற்றுக் கொள்ள முற்பட்டபோதே கைது செய்யப்பட்டுள்ளார்.

குருநாகல் பஸ் நிலையத்தைத் துப்புரவு செய்தல் மற்றும் பொது மலசலக்கூடத்தைத் துப்புரவு செய்தல் ஆகியவற்றுக்கான

07

## யாழ்தேவி ரயில் சேவை வாரத்தில் 3 நாள்களுக்கு!

யாழ்ப்பாணம், மே. 09

யாழ்தேவி ரயில் வாரத்தில் மூன்று நாள்கள் சேவையில் ஈடுபட்ட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது இடம்பெற்று வரும் சேவைக்கு மேலதிகமாக வாரத்தில் திங்கள்கிழமை, புதன்கிழமை, வெள்ளிக்கிழமை ஆகிய மூன்று தினங்கள் கொழும்பிலிருந்து காங்கேசன்துறை வரை சேவையில் ஈடுபடவுள்ளது.

இச்சேவையானது எதிர்வரும் திங்கட்கிழமையிலிருந்து ஆரம்பிக்கப்படவுள்ளது.

குறித்த தினங்களில் கொழும்பிலிருந்து காலை

07

## யாழில் கொட்டித் தீர்த்த மழையால் செம்மணி அகழ்வுப் பணி பாதிப்பு!

யாழ்ப்பாணம், மே. 09

யாழ்ப்பாணத்தில் நேற்று வெள்ளிக்கிழமை திடீரென பெய்த மழை காரணமாக செம்மணி புதைகுழி அகழ்வுப் பணிகளுக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது.

புதைகுழி பகுதிக்குள் வெள்ள நீர் தேங்கியமையால், நல்லூர் பிரதேச சபையின் "கலி பவுசர்" மூலம் வெள்ள நீர் வெளியேற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம்

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இலங்கை அபிவிருத்திப் பாதைக்கு 3 தசாப்தங்களாக பெரும் சவால்கள்!

## ஆசிய அபிவிருத்தி வங்கி சுட்டிக்காட்டு

கொழும்பு, மே. 09

இலங்கையின் அபிவிருத்திப் பாதையானது கடந்த மூன்று தசாப்தங்களாகப் பல்வேறு பாரிய சவால்களுக்கு மத்தியில் சோதிக்கப்பட்டு வருவதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் ஷானன் கவுலின் தெரிவித்துள்ளார்.




சுனாமி பேரலை, பயங்கரவாதத் தாக்குதல்கள், கொவிட் பெருந்தொற்று மற்றும் மிகக்கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அண்மையில் ஏற்பட்ட "டித்வா" சூறாவளி வரை இலங்கை தொடர்ச்சியான பாதிப்புகளைச் சந்தித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், தற்போது மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழல், இலங்கையின் மீட்சிப் பாதைக்கு புதிய அச்சுறுத்தல்களை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் எச்சரித்துள்ளார். இந்தத் தொடர் நெருக்கடிகள் காரணமாக, பொருளாதார ரீதியாக வலுவாக இருந்த குடும்பங்கள் கூட வறுமைக்குள் தள்ளப்பட்டுள்ளதோடு, நாட்டின் நீண்ட கால அபிவிருத்தி இலக்குகளும் பின்னடைவைச் சந்தித்துள்ளன.

எவ்வாறாயினும், அரசாங்கம் முன்னெடுத்து வரும் சீர்திருத்த நடவடிக்கைகள் பாராட்டுக்குரியவை எனத் தெரிவித்த அவர், எதிர்கால அதிர்ச்சிகளைத் தாங்கும் வகையில் நெகிழ்ச்சியான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது அவசியம் என வலியுறுத்தினார்.

குறிப்பாகப் பெண்கள், சிறுவர்கள், முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளைப் பாதுகாக்கும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை டிஜிற்றல் மயமாக்கல் ஊடாக வலுப்படுத்த வேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)



# வியட்நாம் ஜனாதிபதிக்கு நேற்று அமோக வரவேற்பு!

கொழும்பு, மே. 09

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் அழைப்பின் பேரில், இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள வியட்நாம் சோசலிசக் குடியரசின் ஜனாதிபதியும் வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவின் பொதுச் செயலாளருமான டோ லாமை வரவேற்கும் உத்தியோகபூர்வ நிகழ்வு, ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையில் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலக வளாகத்தில் நடைபெற்றது.

வியட்நாம் மற்றும் இலங்கைக்கிடையிலான பொருளாதார, கலாசார மற்றும் சமூக உறவுகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் வியட்நாம் ஜனாதிபதி டோ லாம் இந்த உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

பொலிஸ் குதிரைப்படைப் பிரிவினரின் மரியாதையுடன் ஜனாதிபதி அலுவலக வளாகத்துக்கு அழைத்து வரப்பட்ட வியட்நாம் சோசலிசக் குடியரசின் ஜனாதிபதியும் வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவின் பொதுச் செயலாளருமான டோ லாமுக்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவினால் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இரு நாடுகளினதும் தேசிய கீதங்கள் இசைக்கப்பட்டதைத் தொடர்ந்து, வியட்நாம் ஜனாதிபதி டோ லாமை வரவேற்கும் உத்தியோகபூர்வ நிகழ்வு ஆரம்பமானது. இதன்போது முழுமையான அரச கௌரவத்துடன் மரியாதை வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு வியட்நாம் ஜனாதிபதி வரவேற்கப்பட்டார்.

வியட்நாம் ஜனாதிபதி டோ லாம் மற்றும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஆகியோர் முப்படையினரின் கௌரவ மரியாதையை ஏற்றுக்கொண்டதன் பின்னர், வியட்நாம் - இலங்கை அரச பிரதிநிதிகள் அறிமுகப்படுத்தப்பட்டனர். இதனைத் தொடர்ந்து இரு நாட்டுத் தலைவர்களும் உத்தியோகபூர்வ புகைப்படம் பிடிக்கும் நிகழ்விலும் இணைந்து கொண்டனர். (அ)

# அர்ச்சுனா எம்.பியா? தீவிரவாதியா?

## சீலரத்ன தேரர் கேள்வி

கொழும்பு, மே. 09

பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா வைத்தியரா அல்லது தீவிரவாதியா என ஜனசெத பெரமுன கட்சியின் தலைவர் பத்தரமுல்ல சீலரத்ன தேரர் கேள்வி எழுப்பியுள்ளார்.

கச்சதீவை மட்டும் அல்ல யாழ்ப்பாணத்தையும் தமிழகத்துக்கு கொடுத்து விடுங்கள் என அர்ச்சுனா தெரிவித்த கருத்தை அடிப்படையாகக் கொண்டே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

"கச்சதீவு மீளப்பெறப்படும் என விஜய் கருத்து வெளியிட்டிருந்தார். இது தொடர்பில் நாம் அன்று கதைக்க முற்படும் போது, ஜனாதிபதி கச்சதீவுக்கு சென்று, அதனை வழங்கமாட்டோம் என உறுதியளித்தார்.

ஆனால் பாராளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்தி, கச்சதீவை மட்டும் அல்ல யாழ்ப்பாணத்தையும் வழங்குமாறு அர்சசுனா குறிப்பிடுகின்றார்.

அர்ச்சுனா வைத்தியரா, கொள்ளையரா, தீவிரவாதியா? டயஸ்போராக்களின் தேவைக்கேற்ப இந்நாட்டை ஆள முடியாது.

சிங்களவர்களின் பொறுமையை சோதிக்க முற்பட வேண்டாம் என தளபதிக்காக பேசும் அரசியல்வாதிகளுக்கு கூறிவைக்க விரும்புகின்றோம்.'-என்றார் சீலரத்ன தேரர். (அ)

# எரிபொருள்கள் கொள்வனவில் வெளிப்படைத்தன்மை இல்லை

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 09

இலங்கையின் எரிபொருள் கொள்வனவு நடைமுறைகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் வினைத்திறன் இல்லையென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பாராளுமன்றத்தில் கடுமையாகச் சாடியுள்ளார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கொடுக்கல் வாங்கல்களில் பாரிய முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாகக் குறிப்பிட்ட அவர், இது குறித்து அரசாங்கம் உடனடியாக விளக்கமளிக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

கடந்த 12 மாதங்களில் பதிவு செய்யப்பட்ட புதிய எரிபொருள் விநியோகஸ்தர்களின் விவரங்கள் மற்றும் ஒப்பந்த விதிமுறைகளை மீறிய நிறுவனங்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அவர் கேள்வி எழுப்பினார்.

குறிப்பாக, நீண்டகால ஒப்பந்தங்களை விட அவசர கொள்வனவுகள் மூலம் எரிபொருளைப் பெற்றதால் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள நிதி இழப்புகள் குறித்து விரிவான ஒப்பீட்டு அறிக்கையை அவர் கோரினார்.

சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்தில் "ஈரானிய லைட்" மசகு எண்ணெய்க்குப் பதிலாக "முர்பன்" மசகு எண்ணெயைப் பயன்படுத்துவதால் உற்பத்தித்திறன் குறைந்து விலை அதிகரித்துள்ளதாகத் தொழில்நுட்பக் காரணங்களை அவர் முன்வைத்தார்.

அத்துடன், ஒப்பந்தத்தை நிறைவேற்றத் தவறிய நிறுவனத்திடமே மீண்டும் அதிக விலைக்கு எரிபொருளைக் கொள்வனவு செய்தமை போன்ற தீர்மானங்கள் நாட்டுக்குப் பாதகமாக அமைந்துள்ளதாகவும், இதற்கு அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும் எனவும் சஜித் மேலும் தெரிவித்தார். (அ)

# தீவிரமாகப் பரவும் வைரஸ் காய்ச்சல் 4 பாடசாலைகள் தற்காலிகமாக பூட்டு

கொழும்பு, மே. 09

தெனியாய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் இன்புளுவென்சா போன்ற ஒரு வகை வைரஸ் காய்ச்சல் வேகமாகப் பரவி வருவதன் காரணமாக, தெனியாய கல்வி வலயத்திலுள்ள நான்கு முக்கிய பாடசாலைகளை தற்காலிகமாக மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் குறித்து தெனியாய வலயக் கல்விப் பணிப்பாளர் நிசாக ஹெட்டிகொட தெரிவிக்கையில்-

பாடசாலை மாணவர்களிடையே இந்த வைரஸ் தொற்று மேலதிகமாகப் பரவுவதைத் தடுக்கும் நோக்கில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்தப் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

தென் மாகாண ஆளுநர் அலுவலகத்தினால் வழங்கப்பட்ட ஆலோசனைகளுக்கு அமையவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, தெனியாய தேசிய பாடசாலை, தெனியாய புனித மத்யூஸ் இரு மொழிப் பாடசாலை, தெனியாய ராஜபக்ஷ வித்தியாலயம், பல்லேகம சித்தார்த்த ஆரம்பப் பாடசாலை ஆகிய நான்கு பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் இரண்டு நாள்களுக்குத் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

சுகாதார நிலைமைகளைக் கருத்திற்கொண்டு எடுக்கப்பட்டுள்ள இந்த முடிவுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பெற்றோர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அதேவேளை, காய்ச்சல் அறிகுறிகள் தென்படும் மாணவர்களை உடனடியாக மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது-என்றார். (அ)

# மிருகக்காட்சிசாலையில் சிங்க குட்டிகளை பொதுமக்கள் பார்வையிடுவதற்கு அனுமதி!

கொழும்பு, மே. 09

தெஹிவளை தேசிய மிருகக்காட்சிசாலையில் உள்ள "நிபோ" மற்றும் "பெனி" ஆகிய சிங்க ஜோடிகளுக்குப் பிறந்த இரண்டு சிங்கக் குட்டிகள் தற்போது பொது மக்கள் பார்வைக்காக விடப்பட்டுள்ளன.

இந்தக் குட்டிகளைப் பார்வையிடுவதற்காக மிருகக்காட்சிசாலை நிர்வாகம் விசேட நேர ஒதுக்கீட்டை அறிவித்துள்ளது.

அதன்படி, தினமும் முற்பகல் 10.00 மணி முதல் 11.30 மணி வரை பொது மக்கள் இந்தச் சிங்கக் குட்டிகளைப் பார்வையிட முடியும். (அ)

# வாகன இலக்கத்தகடுகள் அச்சிடும் பணி ஜூனில்!

கொழும்பு, மே. 09

நாட்டில் நீண்டகாலமாகத் தாமதமடைந்துள்ள வாகன இலக்கத் தகடுகளை அச்சிடும் பணிகள் எதிர்வரும் ஜூன் மாதம் 10ஆம் திகதி முதல் மீள ஆரம்பிக்கப்படும் என போக்குவரத்து பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வாகன இலக்கத் தகடுகளை அச்சிடுவதற்காக புதிய நிறுவனம் ஒன்றுக்கு விலைமனு வழங்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தியோகபூர்வ ஒப்பந்தம் கடந்த மார்ச் மாதம் 10ஆம் திகதி அந்த நிறுவனத்துடன் கையெழுத்திடப்பட்டுள்ளது.

ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின்படி, ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்ட நாளிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் அச்சிடும் பணிகளை ஆரம்பிக்க வேண்டும்.

அதற்கமைய, ஜூன் மாதம் 10ஆம் திகதிக்குள் வாகன இலக்கத் தகடுகளை அச்சிடும் பணிகளை அந்த நிறுவனத்தினால் மீள ஆரம்பிக்க முடியும்-என்றார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
09.05.2026 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 25

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## ஜனாதிபதியின் மேதின உரையின் விளைவான சர்ச்சை

தற்போது நீதிமன்றங்களில் விசாரணையில் இருக்கும் சில வழக்குகளில் தீர்ப்புகள் வழங்கப்படுவதற்கு முன்னதாகவே அவற்றின் முடிவுகள் குறித்து ஜனாதிபதி அநுர குமார திசநாயக்கவுக்கு தெரிந்திருக்கிறது என்று மற்றவர்கள் நினைக்கக்கூடியதாக தேசிய மக்கள் சக்தியின் மேதினப் பேரணியில் அவர் நிகழ்த்திய உரை அமைந்துவிட்டது.

ஜனாதிபதியும் அரசாங்கத்தின் மற்றைய தலைவர்களும் நிகழ்த்துகின்ற உரைகளை மிகவும் உன்னிப்பாக அவதானித்து குற்றச்சாட்டுக்களைச் சுமத்தும் எதிரணி அரசியல்வாதிகள் அவரின் இந்த மேதின உரையை நீதித்துறை மீதான அரசாங்கத்தின் தலையீடு என்று கடுமையான கண்டனங்களை முன்வைக்கிறார்கள். இதில் முன்னாள் அமைச்சரும் சட்ட நிபுணருமான பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் முன்னணியில் நிற்கிறார்.

"மே தினத்துக்கு முதல்நாள் (ஏப்ரில் 30) நீதிமன்றம் ஒன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட வழக்கொன்றின் தீர்ப்பு மே 25ஆம் திகதி வழங்கப்படவிருக்கிறது. இது தொடர்பில் மேதினப் பேரணியில் ஜனாதிபதியின் கருத்து அந்த் தீர்ப்பு எத்தகையதாக இருக்கும் தனக்கு தெரியும் என்று அவர் கூறுவதைப் போன்று அமைந்திருந்தது. அது ஜனநாயக சமூகங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நீதித்துறைப் பாரம்பரியங்களுக்கு முரணானது என்பதுடன் நீதித்துறை மீது அநாவசியமான நெருக்குதலைப் பிரயோகிப்பதாகவும் அமைகிறது. இத்தகைய கருத்து அரசியலமைப்புக் கோட்பாடுகளை அச்சுறுத்துகிறது" என்று பேராசிரியர் பீரிஸ் செய்தியாளர்கள் மகாநாட்டில் தெரிவித்தார்.

எதிரணி அரசியல் கட்சிகள் மாத்திரமல்ல, இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் போன்ற முக்கியமான துறைசார் நிபுணத்துவ அமைப்புக்களும் பல்வேறு சிவில் சமூக அமைப்புக்களும் ஜனாதிபதியின் கருத்தைக் கண்டனம் செய்து அறிக்கைகளை வெளியிட்டிருக்கின்றன. சட்டத்தரணிகள் சங்கத்தின் அறிக்கையில், "ஜனநாயக சமூகம் ஒன்றில் சுயாதீனமான நீதித்துறையின் மையப் பாத்திரம் அச்சமும் பக்கச்சார்புமின்றி செயற்படுவதில் நீதிபதிகளுக்கு இருக்கும் ஆற்றலிலேயே தங்கியிருக்கிறது. ஜனாதிபதியின் கருத்து நீதித்துறையின் மீதான பொதுமக்களின் நம்பிக்கையை சிதைப்பதாக இருக்கிறது" என்று கூறப்பட்டிருக்கிறது.

நீதிமன்றங்களின் தீர்ப்புகள் எவ்வாறு அமையும் என்று முன்கூட்டியே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி கூறுவது நீதித்துறையின் தீர்மானங்களில் அப்பட்டமான ஒரு தலையீடு என்றும் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயத்தில் உத்தரவாதம் செய்யப்பட்டிருக்கும் சிந்தனைச் சுதந்திரத்தை பயன்படுத்துவதற்கான உரிமை ஜனாதிபதிக்கு இருக்கிறது என்றும் இந்த சர்ச்சை தொடர்பிலான கருத்தாடல்களில் வேறுபட்ட இரு வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன.

ஜனாதிபதி மீதான விமர்சனங்களுக்கு பதிலளித்த அமைச்சரவையின் பேச்சாளர் நாளிந்த ஜயதிஸ்ஸ, "நீதிமன்றங்களில் விசாரணையில் இருக்கும் வழக்குகள் தொடர்பிலான திகதிகளையே ஜனாதிபதி தனது மேதின உரையில் குறிப்பிட்டார். இந்த திகதிகள் பொது வெளியில் தெரிந்த விபரங்கள் தான்" என்று கூறினார்.

மே 25ஆம் திகதி நீதிமன்றத்தில் வழங்கப்படவிருக்கும் தீர்ப்பு ஒன்று மக்கள் கரகோசம் செய்து வரவேற்கக்கூடியதாக இருக்கும் என்ற ஜனாதிபதியின் கூற்றுத்தான் அந்த தீர்ப்பில் அரசியல் செல்வாக்கு செலுத்துகிறதோ என்ற "நியாயமான" சந்தேகத்தைக் கிளப்புகிறது. கரகோசம் செய்து வரவேற்கக்கூடிய தீர்ப்பு என்றால் அது தனக்கும் மக்களுக்கும் மகிழ்ச்சி தரக்கூடிய தீர்ப்பு என்றுதானே. ஜனாதிபதி சொல்ல வந்தார். அதை எவ்வாறு 25 நாட்களுக்கு முன்கூட்டியே அவரால் கூறமுடியும் என்ற கேள்வியில் நிச்சயமாக நியாயம் இருக்கிறது.

மேதினப் பேரணியில் ஆதரவாளர்களின் உற்சாகத்துக்கு மத்தியில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் என்ற வகையில் தான் நிகழ்த்துகின்ற உரைக்கும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி என்ற வகையில் அரசியலமைப்பு ரீதியான நிறுவனங்களின் சுயாதீனத்தை பாதுகாப்பதில் தனக்கு இருக்கும் பொறுப்புக்கும் இடையில் உள்ள முக்கியமான வேறுபாட்டை ஜனாதிபதி உணர்ந்துசெயற்பட வேண்டிய தலையாய பொறுப்பைக் கொண்டிருக்கிறார் என்பதே ஈழநாட்டின் உறுதியான கருத்தாகும்.

### நிலக்கரி இறக்குமதி முறைகேடு'

# விசாரணைகளை ஆரம்பித்தது ஜனாதிபதி விசேட ஆணைக்குழு

கொழும்பு, மே. 09

2009ஆம் ஆண்டு முதல் 2026 ஏப்ரல் 16 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் நிலக்கரி இறக்குமதி தொடர்பான முறைகேடுகளைக் கண்டறிய ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட விசேட விசாரணை ஆணைக்குழு, தனது ஆரம்பகட்ட விசாரணைகளை ஆரம்பித்துள்ளது

நிலக்கரி இறக்குமதி, நிலக்கரியைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்தல் மற்றும் அது சார்ந்த ஏனைய செயற்பாடுகளில் இடம் பெற்றதாகக் கூறப்படும் ஊழல்கள், முறைகேடுகள் மற்றும் சட்டவிரோதச் செயல்கள் குறித்து விசாரிப்பதே இந்த ஆணைக்குழுவின் முக்கிய பணியாகும்.

இந்த ஆணைக்குழு கொழும்பு 12, அதிக்கரன மாவத்தை, 'அதிக்கரன பியச' வளாகத்திலுள்ள நீதவான் நீதிமன்றக் கட்டடத் தொகுதியின் 05ஆவது மாடியில் அமைக்கப்பட்டுள்ளது.

நிலக்கரி இறக்குமதி தொடர்பான முறைகேடுகள் குறித்து ஏதேனும் தகவல்கள் அல்லது சாட்சியங்கள் பொது மக்களிடமோ அல்லது நிறுவனங்களிடமோ இருந்தால், அவற்றை எதிர்வரும் 22ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவினால் இந்த விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அண்மையில் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# கடவுச்சீட்டு விலை மனு கோரலில் அரசாங்கம் ஊழல் செய்துள்ளது

### நாட்டுக்கு பில்லியன் கணக்கில் நட்டம்

கொழும்பு, மே 09

கடந்த கால ஆட்சியாளர்களின் ஊழல் மற்றும் மோசடிகளை விமர்சித்து, வரிசையற்ற நாட்டை உருவாக்குவதாகக் கூறி ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசாங்கம், இன்று முன்னைய ஆட்சியாளர்களை விடவும் மிக மோசமான ஊழல் நிறைந்த அரசாங்கமாக மாறி கடவுச்சீட்டு விலை மனு கோரலிலும் ஊழல் செய்துள்ளது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே குற்றம்சாட்டியுள்ளார்.

சர்வஜன அதிகாரம் கட்சியின் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

(எ)

# டுபாய் சுத்தாவின் போதைப்பொருள் வலையமைப்பு சுற்றிவளைப்பு

கொழும்பு, மே 09

பெருமளவிலான போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் "டுபாய் சுத்தா" என்பவரின் போதைப்பொருள் வர்த்தகத்தில், பண்டாரகம பகுதிக்கான பிரதான விநியோகஸ்தர் உட்பட 7 சந்தேக நபர்களை பண்டாரகம பொலிஸார் கைது செய்துள்ளனர்.

போதைப்பொருள் பொதி செய்யப்படும் இடமொன்றை சுற்றிவளைத்த போதே இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது 15 இலட்சம் ரூபாய்க்கும் அதிக பெறுமதியுடைய 50 கிராம் ஹெரோயின் மற்றும் 25 கிராம் ஐஸ் போதைப் பொருள், போதைப்பொருட்களை பொதி செய்ய பயன்படுத்தப்படும் விசேட காகிதங்கள், பொலித்தீன் பைகள், 4 தொலைபேசிகள், கார் ஒன்று மற்றும் ஏனைய உபகரணங்களையும் பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

பண்டாரகம, வெல்மில்ல அலோத்தியாவ பகுதியில் உள்ள வீடொன்றில் சந்தேகத்துக்கிடமான குழுவினர் தங்கியிருப்பதாக பண்டாரகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பிரதான பொலிஸ் பரிசோதகர் சன்ன அமரசேகரவுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

சந்தேக நபர்கள் பாணந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ள நிலையில், பண்டாரகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(எ)

# பறவைகள் பூங்கா உரிமையாளர் விடுவிப்பு வெளியான செய்தி பொய் - பொலிஸ் மறுப்பு

கொழும்பு, மே 09

அம்பாந்தோட்டை பகுதியில் பறவைகள் பூங்கா ஒன்றின் உரிமையாளர், சட்டவிரோதமான முறையில் அதிவேக மோட்டார் சைக்கிள்களை இறக்குமதி செய்த வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டதாக ஊடகங்களில் வெளியான செய்திகளை பொலிஸார் மறுத்துள்ளனர்.

பொலிஸார் வெளியிட்ட அறிக்கையில், சந்தேக நபர் நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டதாகக் கூறப்படும் செய்திகள் பொய்யானவை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை, நகர வெவ பகுதியைச் சேர்ந்த பறவைகள் பூங்கா உரிமையாளர் மற்றும் ஏனைய இரு சந்தேக நபர்களுக்கு எதிராக, அதிவேக மோட்டார் சைக்கிள்களை சட்டவிரோதமாக இறக்குமதி செய்தமை மற்றும் கஞ்சா வைத்திருந்தமை தொடர்பான சட்ட நடவடிக்கைகள் தொடர்கின்றன.

இந்தச் சம்பவம் தொடர்பில் மத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இந்த விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். இந்த வழக்கு புதன்கிழமை அம்பாந்தோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் முதற்கட்ட விசாரணைகளை நிறைவு செய்த நீதிமன்றம், இந்த விடயங்களை தனித்தனி வழக்குகளாகத் தொடருமாறு உத்தரவிட்டுள்ளதாக பொலிஸார் மேலும் மேலும் தெரிவித்தனர்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**மேடம்**
உங்கள் பிடிவாதப் போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். வியாபாரம் சூடு பிடிக்கும். உத்தியோகத்தில் தலைமையின் ஆதரவு கிட்டும். தேவைகள் பூர்த்தியாகும்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் தன்னம்பிக்கை குறையும். சிலரின் தவறான செயல்களை எண்ணி வருந்துவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் குறைக் கூறுவார்கள். பொறுமைத் தேவைப்படும்.

**மிதுனம்**
பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். எதிர்பார்த்த வேலைகள் முடியும்.

**கடகம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். தொட்டது துலங்கும்.

**சிம்மம்**
குடும்பத்தினருடன் உங்களின் நேரத்தை செலவழிப்பீர்கள். அக்கம்-பக்கம் இருப்பவர்களின் அன்புத் தொல்லை குறையும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள்.

**கன்னி**
தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். புது வேலை கிடைக்கும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். உழைப்பால் உயரும்.

**துலாம்**
குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். பூர்வீக சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். விருந்தினர் வருகை அதிகரிக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**விருட்சிகம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாக பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்றெல்லாம் வருந்துவீர்கள். பேச்சில் இங்கிதம் தேவைப்படும்.

**மகரம்**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. யாரையும் பரிந்துரை செய்ய வேண்டாம். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் விவாதம் வேண்டாம். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**கும்பம்**
உங்களுடைய ஆலோசனைகளை எல்லோரும் ஏற்கும் படி இருக்கும். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். சாதிக்கும் நாள்.

**மீனம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும்.

### பருத்தித்துறையில் உள்ள உணவகம் ஒன்றில்

# லஞ்சீற் பாவித்த குற்றச்சாட்டுக்காக ஒரு இலட்சம் ரூபாய் தண்டம் விதிப்பு

யாழ்ப்பாணம், மே 09

பருத்தித்துறை நகர சபையின் பொதுச்சுகாதார பரிசோதகரான ப. தினேஸினால் நகர சபை யின் ஆளுகைக்குட்பட்ட பகுதியில் உள்ள உணவகம் ஒன்றில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது அனுமதி பெறாமலும், உணவு வழங்கும் பதிவுச் சான்றிதழ் இல்லாமலும், உணவு பொதியிடலுக்கு லஞ்சீற் பயன்படுத்தியமை, உணவுத் தயாரிப்புக்கு பயன்படும் நீரானது குடிக்கத்தகுந்தது என உறுதி செய்ய தவறியமை, உடல் நலத்தகுதியை உறுதிப்படுத்தும் மருத்துவ சான்றிதழ் இல்லாமல் உணவை கையாண்டமை, தனிநபர் சுகாதாரம் பேணாமல் உணவை கையாண்டமை மற்றும் வெளிச் சுற்றாடலினால் பாதிக்கப்படகூடியவாறான சூழலில் உணவை உற்பத்தி செய்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் கீழ் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, உணவக உரிமையாளர் தன் மீதான குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டதை அடுத்து, உரிமையாளரை கடுமையாக எச்சரித்த மன்று, ஒரு இலட்சம் ரூபாய் தண்டப் பணம் விதித்தது. (எ-03)

# வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தொடர்ந்து கடும் மழை பெய்யும்

கொழும்பு, மே 09

இலங்கையைச் சூழவுள்ள வளிமண்டலத்தின் கீழ் அடுக்கில் ஏற்பட்டுள்ள தளம்பல் நிலை காரணமாக, நாட்டின் தற்போதைய மழை நிலைமை அடுத்த சில நாட்களுக்கு தொடரும் என்று எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று அந்தத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய, ஊவா மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களில் காலை வேளையிலும் மழை பெய்யக்கூடும்.

மத்திய, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களிலும் குருநாகல் மாவட்டத்திலும் சில இடங்களில் அதிகாலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படலாம் என அத்திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழையின் போது ஏற்படக்கூடிய தற்காலிக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக் கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (எ)

# வவுனியாவிலிருந்து புதுக்குடியிருப்புக்கு அஞ்சல் சேவைக்கு திணைக்கள வாகனம்

வவுனியா, மே 09

வவுனியாவிலிருந்து புதுக்குடியிருப்பு வரையான அஞ்சல் விநியோக சேவைகள், பல வருடங்களுக்குப் பிறகு நேற்று முதல் மீண்டும் வவுனியா அஞ்சல் திணைக்களத்துக்குச் சொந்தமான வாகனத்தின் மூலம் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டன.

கடந்த பல வருடங்களாக வவுனியா அஞ்சல் திணைக்களத்தில் போதிய வாகன வசதிகள் இல்லாமையால், அஞ்சல் பொதிகள் மற்றும் கடிதங்களை வவுனியாவிலிருந்து புதுக்குடியிருப்புக்கு கொண்டு செல்வதற்கு இ.போ. ச. பஸ்கள் பயன்படுத்தப்பட்டு வந்தன.

தற்போது திணைக்கள வாகனத்தைப் பயன்படுத்துவது சிக்கனமானது எனக் கண்டறியப்பட்டுள்ள துள்ளதுடன் பஸ் நேரங்களுக்காகக் காத்திருக்காமல், அஞ்சல் சேவைகளை உரிய நேரத்தில் துரிதமாக வழங்க முடியும் என தெரிவிக்கப்படு கின்றது.

நேற்று காலை வவுனியா அஞ்சல் திணைக்கள வளாகத்தில் திணைக்கள இலச்சினை பொறிக்கப்பட்ட வாகனம் புதுக்குடியிருப்பு நோக்கிய தனது சேவையை ஆரம்பித்தது. (எ)

# வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் உற்சவம் பற்றி கலந்துரையாடல்

முல்லைத்தீவு, மே 09

வரலாற்றுச் சிறப்பு மிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய 2026 ஆம் ஆண்டுக்கான வருடாந்த பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு ஆரம்பகட்ட திட்டமிடல் கலந்துரையாடல் முல்லைத்தீவு மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ள பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகள் தொடர்பில் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டன.

ஆண்டு தோறும் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் இலட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொள்வதால், இந்த நிகழ்வு முல்லைத்தீவு மாவட்டத்தின் முக்கியமான மத மற்றும் சமூக நிகழ்வாக கருதப்படுகிறது.

இதனால், ஆலயத்துக்கு வருகை தரும் பக்தர்களுக்கு ஏற்படக்கூடிய அசௌகரியங்களைத் தவிர்த்து, பாதுகாப்பான மற்றும் வசதியான சூழலை உருவாக்குவது மாவட்டச் செயலகம், தொடர்புடைய துறைகள் மற்றும் ஆலய நிர்வாக சபைக்கு ஒப்படைக்கப்பட்ட முக்கிய பொறுப்பாகும்.

கடந்த ஆண்டின் திருவிழாவில் ஏற்பட்ட அனுபவங்கள் மற்றும் கற்றுக்கொண்ட பாடங்கள் விளக்கமாக முன்வைக்கப்பட்டதுடன் அதனை அடிப்படையாகக் கொண்டு,

போக்குவரத்து முகாமைத்துவம், கடைகள் ஒதுக்கீடு, மலசலகூட வசதிகள், குடிநீர் வசதிகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் போன்ற முக்கிய அம்சங்கள் குறித்து விளக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து மாவட்டச் செயலாளரால் ஒவ்வொரு துறைசார்ந்த பிரிவுகளின் தயார்நிலை தொடர்பில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், அடுத்த கட்ட கலந்துரையாடல் 14 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு ஆலய வளாகத்தில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், அங்கு மேலதிகமாக போக்குவரத்து, திட்டமிடல், சேவை வசதிகள் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து விரிவான ஆய்வு மேற்கொள்ளப்படவுள்ளன. (எ)

## மகோற்சவம்

யாழ்ப்பாணம், மே 09

சுன்னாகம் கந்தரோடை அருள்மிகு அருனாந்தப் பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. 27 ஈம் திகதி வேட்டைத்திருவிழாவும், 28 ஆம் திகதி சப்பறத்திருவிழாவும், 29 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 30 ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும், 31 ஆம் திகதி பூங்காவனத்திருவிழாவும் நடைபெறவுள்ளன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# போதைப்பொருளை முற்றாக ஒழிக்க ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்பு

கொழும்பு, மே 09

போதைப்பொருள் அச்சுறுத்தலை முற்றாக ஒழிப்பதற்கு அனைத்துத் துறைகளிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய மறு சீரமைப்புகளை விரைவாக முன்னெடுக்கவும் முழு நாடுமே ஒன்றாக தேசிய செயல்பாட்டு சபையில் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

போதைப்பொருள் அச்சுறுத்தலை இந்த நாட்டிலிருந்து ஒழிப்பதற்குத் தேவையான சட்ட திருத்தங்கள் உட்பட அனைத்துத் துறைகளிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய மறுசீரமைப்புகளை விரைவாக முன்னெடுக்குமாறு ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

போதைப்பொருள் அச்சுறுத்தலை முற்றாக ஒழிப்பதற்கான "முழு நாடுமே ஒன்றாக" தேசிய செயல்பாட்டுச் சபை நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் கூடியது.

இந்தக் கூட்டத்தின் போது, நாட்டில் கைப்பற்றப்படும் போதைப்பொருட்கள் மீண்டும் சமூகத்துக்குள் செல்வதைத் தடுத்து, அவற்றை சட்டபூர்வமான நடைமுறைகளின் கீழ் விரைவாக அழிப்பதற்கும், குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கும் செயல்பாடுகளைத் துரிதப்படுத்துவதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு ஜனாதிபதி சம்பந்தப்பட்ட பிரிவினருக்கு அறிவுறுத்தினார்.

இந்தச் செயல்பாடுகளைத் துரிதப்படுத்தி, பொதுமக்கள் மற்றும் இந்த தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள குழுக்களிடையே நம்பிக்கையை உறுதிப்படுத்த வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அனைவரையும் ஒன்றிணைத்து "முழு நாடுமே ஒன்றாக" தேசிய செயற்பாட்டை இதன் மூலம் வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும் என்றும் குறிப்பிட்டார்.

"முழு நாடுமே ஒன்றாக" தேசிய செயல்பாட்டின் கீழ் முன்னெடுக்கப்படும் சுற்றிவளைப்புகள் மற்றும் கைது நடவடிக்கைகள் உள்ளிட்ட போதைப்பொருள் ஒழிப்புத் திட்டத்தின் முன்னேற்றம் குறித்து இங்கு விரிவாக ஆராயப்பட்டதுடன், இந்தத் தேசிய செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், போதைப்பொருள் தொடர்பான சுற்றிவளைப்புகள் 80 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். (எ)

# தோல் புற்றுநோய் பாதிப்பு அதிகரிப்பு

## சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை

கொழும்பு, மே 09

தோல் புற்றுநோய் பாதிப்புகள் அதிகரித்து வருவதாக சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். அதிகப்படியான சூரிய ஒளியில் இருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள பொதுமக்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வைத்திய ஆலோசகர் புற்றுநோய் நிபுணர் வைத்தியர் ஹசந்தி ஜெயலத் தெரிவித்துள்ளதாவது,

ஆண்டுதோறும் சுமார் 35,000 வழக்குகள் பதிவாகின்றன. ஒவ்வொரு ஆண்டும் சுமார் 15,000 உயிரிழப்புகள் ஏற்படுகின்றன.

சூரிய ஒளியால் ஏற்படும் பாதிப்புகளை குறைப்பதற்காக குறைந்தபட்சம் ஸ்ரீகு 30 பாதுகாப்பு கொண்ட சூரியக்கதிர் பாதுகாப்புக் கிரீமை பயன்படுத்த வேண்டும். காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை நேரடி சூரிய ஒளியைத் தவிர்க்க வேண்டும்.

வெளியில் செல்லும் போது தொப்பி உள்ளிட்ட பாதுகாப்பு ஆடைகளை அணிவதுடன், தொடர்ந்து சூரியக்கதிர் பாதுகாப்புக் கிரீமை பயன்படுத்த வேண்டும்.

தோல் புற்றுநோய்களில் பேசல் செல் கார்சினோமா, ஸ்குவாமஸ் செல் கார்சினோமா மற்றும் மெலனோமா ஆகியவை அதிகமாகக் காணப்படுகின்றன. அவற்றில் மெலனோமா ஆரம்பத்திலேயே கண்டறியப்படாவிட்டால் வேகமாகப் பரவி உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடியதாகக் கருதப்படுகிறது.

மேலும், சில சரும வெண்மைப்படுத்தும் கிரீம்களில் ஹைட்ரோகுயினோன், பாதரசம் மற்றும் ஸ்டீராய்ட்கள் போன்ற தீங்கு விளைவிக்கும் இரசாயனங்கள் இருக்கக்கூடும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது. இவ்வகை இரசாயனங்கள் சருமத்தின் இயற்கை பாதுகாப்பை பலவீனப்படுத்தி புற்றுநோய் அபாயத்தை அதிகரிக்கக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், குறிப்பாக அதிக சூரிய ஒளி காணப்படும் பகுதிகளில், தோல் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை அதிகரிக்க பொதுமக்கள் மத்தியில் விரிவான அறிவூட்டல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர். (எ)

# அதிரடியாக உயர்ந்த மசகு எண்ணெய் விலை

கொழும்பு, மே 09

ஹோர்முஸ் நீரிணையில் அமெரிக்கா மற்றும் ஈரானுக்கு இடையில் மீண்டும் மோதல் ஏற்பட்டுள்ள நிலையில் உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை மீண்டும் உயர்ந்துள்ளது.

இதன்படி பிரெண்ட் ரக மசகு எண்ணெய் 2.64 சதவீதம் உயர்ந்து பீப்பாய் ஒன்றின் விலை 102.7 அமெரிக்க டொலராக விற்பனை செய்யப்படுகின்றது.

அமெரிக்காவின் டபிள்யு. ரி. ஐ. ரக மசகு எண்ணெய் சுமார் 3 சதவீதம் அதிகரித்து பீப்பாய் ஒன்றின் விலை 97 அமெரிக்க டொலராக உயர்ந்துள்ளது.

ஹோர்முஸ் நீரிணையில் மூன்று அமெரிக்கக் கடற்படை கப்பல்களை ஈரான் தாக்கியதாகக் கூறப்படும் நிலையில், அதற்குப் பதிலடியாக ஈரானிய இராணுவத் தளங்கள் மீது "தற்காப்பு" தாக்குதல்களை நடத்தியதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது. (எ)

# அமைச்சருக்கு அச்சுறுத்தல் சத்தாரத்ன தேரர் கைது!

கொழும்பு, மே 09

ராஜாங்கன சத்தாரத்ன தேரர், மத்திய குற்றப் புலனாய்வுப் பணியகத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால மற்றும் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய ஆகியோருக்கு சமூக வலைத்தளங்கள் ஊடாக அச்சுறுத்தல் விடுத்த குற்றச்சாட்டின் பேரில் இவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தேரரை சங்க அமைப்பிலிருந்து நீக்குவதற்கு சிறீலங்கா ராமண்ய மகா நிகாயவின் செயல் குழு கடந்த ஆண்டு நடவடிக்கை எடுத்திருந்தது.

இவர் யூ- ரியூப் சனல் ஒன்றை நடத்தி வருவதோடு, சமூக வலைத்தளங்கள் வாயிலாக அவர் வெளியிட்ட கருத்துக்கள் குறித்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையைத் தொடர்ந்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. (எ)

# போலி அமெரிக்க டொலர்களுடன் வெளிநாட்டவர்கள் இருவர் கைது!

கொழும்பு, மே 09

போலி அமெரிக்க டொலர்களுடன் தஜிகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த இருவர் காலி - டிக்சன் வீதி பகுதியில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காலி - உனவட்டுன பகுதியில் மோட்டார் சைக்கிள்களை வாடகைக்கு வழங்கும் நிலையத்தின் உரிமையாளர் ஒருவர், உனவட்டுன சுற்றுலா பொலிஸ் பிரிவில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

குறித்த இருவரும் மோட்டார் சைக்கிள்களை வாடகைக்கு எடுப்பதற்காக, 400 அமெரிக்க டொலர்கள் (இலங்கை பெறுமதியில் சுமார் 128,000 ரூபாய்) பெறுமதியான போலி நாணயத்தாள்களை வழங்கியுள்ளனர்.

முறைப்பாட்டை அடுத்து உடனடியாக செயற்பட்ட உனவட்டுன சுற்றுலா பொலிஸ் நிலைய அதிகாரிகள், சந்தேக நபர்கள் தங்கியிருந்த காலி டிக்சன் வீதியிலுள்ள விடுதியைச் சோதனையிட்டனர்.

இதன்போது சந்தேகநபர்களிடமிருந்து மேலும் 5200 போலி அமெரிக்க டொலர் நாணயத்தாள்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இவர்கள் 26 மற்றும் 27 வயதுடைய தஜிகிஸ்தான் நாட்டவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைக்காக ஹபராதுவை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

போலி நாணயத்தாள் புழக்கம், குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டத்தை மீறியமை மற்றும் வெளிநாட்டு செலாவணி சட்டத்தை மீறியமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் இவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்படவுள்ளது. (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நீதிமன்றத்தின் தீர்ப்பை எவரும் குறிப்பிடவில்லை

## நீதி அமைச்சர் ஹர்ஷன தெரிவிப்பு

கொழும்பு, மே 09

நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பை பற்றி எவரும் குறிப்பிடவில்லை. வழக்கு எண் மற்றும் வழக்கு தினம் மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளது. இது பொதுவானதொரு விடயமாகும். வழக்கின் தீர்ப்பு என்னவென்பது எமக்கு தெரியாது. நீதிமன்றமே அறியும். ஆனால், குறித்த வழக்குடன் தொடர்புடைய நபர் நன்கு அறிவார். அதனால் தான் தற்போது திணறுகிறார்கள். போலியான விடயங்களை முன்வைக்கிறார்கள் என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொது மக்கள் பாதுகாப்பு கட்டளையின் கீழான அவசரகால சட்டத்தை நீடிக்கும் வர்த்தமானி அறிவித்தல் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

டித்வா புயல் தாக்கத்தால் ஏற்பட்ட பாதிப்புக்களில் இருந்து மீள்வதற்கும், மக்களுக்கு நிவாரணமளிப்பதற்கும் மாத்திரமே அவசரகால சட்டம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இச்சட்டத்தை பயன்படுத்தி எவரையும் கைது செய்யவில்லை, எவரையும் அச்சுறுத்தவுமில்லை. ஆகவே அவசரகால சட்டத்தை நீடிப்பதால் எந்தவித பிரச்னையும் இல்லை.

வெண்ணெய் பூசும் கத்தியால் நல்லதை செய்யவும் முடியும், தீமையை செய்யவும் முடியும். கத்தியால் பாணுக்கு வெண்ணெய் பூசவும் முடியும், கொலை செய்யவும் முடியும். சட்டமும் அது போன்றதே, கத்தியை கையில் வைத்திருப்பவரின் எண்ணத்துக்கமையவே செயல்பாடும் வெளிப்படும்.

மக்களின் நலனை முன்னிலைப்படுத்திய எண்ணப்பாட்டுடன் தான் அவசரகால சட்டம் நீடிக்கப்பட்டுள்ளது. இதனால் எவரின் மனித உரிமைகளும், ஜனநாயக உரிமைகளும் மீறப்படாது. எவரின் உரிமைகளையும் அரசாங்கம் அச்சுறுத்தலுக்குள்ளாக்க வில்லை. அதற்கான அவசியமும் அரசாங்கத்துக்கு இல்லை.

சர்வதேச ஊடக சுதந்திர சுட்டெண் தரப்படுத்தலில் இலங்கை முன்னிலையில் உள்ளது. ஊடக சுதந்திரம் என்று குறிப்பிட்டுக் கொண்டு எதிர்க் கட்சியினர் அரசியல் தான் செய்கிறார்கள். சமூக ஊடகங்கள் வாயிலாக பொய்யுரைக்கிறார்கள். நாட்டு மக்கள் இதனை தற்போது நம்புவதுமில்லை. ஊடக நெறியாக்கத்தை முன்னிலைப்படுத்தி செயல்படும் ஊடகங்கள் சுதந்திரமாகவே செயல்படுகின்றன. - என்றார். (எ)

# “திறைசேரி பாதுகாப்பில் இந்தியாவை பாருங்கள்”

கொழும்பு, மே 09

இந்தியாவைப் போன்ற பெரிய நாடுகளின் திறைசேரிகளிலிருந்து ஒரு சிறு தொகை கூட காணாமல் போனதாக வரலாறுகள் இல்லாத நிலையில், இலங்கையின் திறைசேரியிலிருந்து பாரிய நிதி கொள்ளையடிக்கப்பட்டமைக்கு அரசாங்கமே முழுமையாகப் பொறுப்புக் கூற வேண்டும் என்று ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவைப் போன்றதொரு பெரிய நாட்டைச் சற்று உற்று நோக்குங்கள். அந்த நாட்டின் திறைசேரி எவ்வளவு பெரியது? அந்தப் பாரிய திறைசேரியிலிருந்து ஒரு சிறிய நிதியேனும் முறைகேடாக வெளியேறியதாகவோ அல்லது காணாமல் போனதாகவோ எமது நாட்டுக்குச் செய்திகள் ஏதும் கிடைத்துள்ளதா? இல்லை. ஆனால், எமது நாட்டில் நிலைமை தலைகீழாக உள்ளது. நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகக் கருதப்படும் திறைசேரியிலிருந்து 2.5 மில்லியன் டொலர்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

திறைசேரியைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் கடமையாகும். அவ்வாறு இருக்கையில், மின்னஞ்சல் செய்திகளில் பிழை இருந்தது, வங்கிக் கணக்கு இலக்கங்கள் தவறாக இருந்தன எனக் கூறி அரசாங்கம் தப்பிக்க முடியாது. இவ்வளவு பெரிய நிதி இழப்புக்கு நிதி அமைச்சரோ, நிதிச் செயலாளரோ அல்லது அந்த ஆவணங்களில் கையொப்பமிட்ட அதிகாரிகளோ யாராக இருந்தாலும், இறுதித் தீர்மானமாக அரசாங்கமே இதற்குப் பொறுப்புச் சொல்ல வேண்டும். - என்றார். (எ)

# வணிக வளாகத்துக்குள் புகுந்து பணத்தை திருடிச்சென்ற குழு!

கொழும்பு, மே 09

தெஹிவளை பகுதியில் அமைந்துள்ள வணிக வளாகம் ஒன்றினுள் கூர்மையான ஆயுதங்களுடன் புகுந்த 6 பெண்கள் உள்ளடங்கிய 10 பேர் கொண்ட குழுவினர், அங்கிருந்த ஊழியர்களைத் தாக்கி சுமார் 13 இலட்சம் ரூபாய் பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 4ஆம் திகதி மாலை 6.30 மணியளவில், அடையாளம் தெரியாத ஆணும் பெண்ணும் குறித்த வணிக வளாகத்துக்குள் நுழைந்தனர். தாம் ஒரு தொலைக்காட்சியை விலைக்கு வாங்கப் போவதாகக் கூறி, அதற்காக 45 ஆயிரம் ரூபாய் பணத்தைக் காசாளரிடம் வழங்கியுள்ளனர். ஊழியர்கள் அவர்களுக்குரிய தொலைக்காட்சியைப் பரிசோதித்து தயார்படுத்திக் கொண்டிருந்தபோது, வேண்டுமென்றே தாமதமாவதாகக் கூறி ஊழியர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பின்னர், தமக்குத் தொலைக்காட்சி வேண்டாம் எனக்கூறி, கொடுத்த பணத்தைத் திரும்பப் பெற்றுக்கொண்டு அங்கிருந்து வெளியேறியுள்ளனர். அவர்கள் சென்ற சிறிது நேரத்திலேயே, அதே ஆணும் பெண்ணும் மேலும் பல ஆண்களையும் பெண்களையும் அழைத்துக் கொண்டு ஆயுதங்களுடன் கடைக்குள் அத்துமீறி நுழைந்துள்ளனர். இரும்புக் கம்பிகள் மற்றும் கூர்மையான ஆயுதங்களைக் கொண்டு அங்கிருந்த ஊழியர்களைத் தாக்கிய குழுவினர், பையொன்றில் வைக்கப்பட்டிருந்த 13 இலட்சத்து 9 ஆயிரம் ரூபாய் பணத்தை திருடிக் கொண்டு சென்றனர்.

அவர்கள் ரயில் தண்டவாளம் வழியாக நடந்தே தப்பிச் சென்றமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. மேற்படி சம்பவம் குறித்து வணிக வளாகம் மற்றும் அங்கிருந்த சி.சி.ரிவி கமராக்களில் பதிவாகியதாக பொலிஸார் குறிப்பிட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை தெஹிவளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# பொலிஸ் சுற்றிவளைப்பில் ஒரே நாளில் 625 பேர் கைது!

கொழும்பு, மே 09

பொலிஸ் மா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய, நாடளாவிய ரீதியில் வியாழக்கிழமை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது, 625 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன் 28,061 பேர் பரிசோதிக்கப்பட்டுள்ளதுடன், 15 பேர் குற்றங்களுடன் தொடர்புடைய மற்றும் நேரடியாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதேநேரம், கைது செய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 255 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 155 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்திய 71 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 52 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், பிற போக்குவரத்து குற்றங்களுக்காக 4,252 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# விஜய் அரசாங்கத்துடன் உறவு: இலங்கை அபிவிருத்திக்கு வாய்ப்பு

## இராதாகிருஷ்ணன் எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, மே 09

தமிழ்நாட்டில் விஜய்யின் அரசாங்கத்துடன் உறவுகளை வைத்துக்கொள்வதால் இலங்கையின் எதிர்கால அபிவிருத்தியில் ஒரு பங்கை பெற்றுக் கொள்ள முடியுமாக இருக்கும் என்று நம்புகிறேன் என்று எதிர்க் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவசர கால சட்டத்தை நீடிக்கும் வர்த்தமானி மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

தமிழ்நாட்டில் விஜய் முதலமைச்சராக பதவியேற்கவுள்ளார். இதற்கு எமது வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கின்றோம். இதற்கு உறுதுணையாகவுள்ள செங்கோட்டையன் தொடர்பிலும் கூற வேண்டும். செங்கோட்டையன் 2018ஆம் ஆண்டில் இலங்கை வந்திருந்த போது யாழ்ப்பாணம், மட்டக்களப்பு நூலகங்களுக்கு புத்தகங்களை வழங்கியிருந்தார். கண்டியில் நடைபெற்ற எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவிலும் கலந்து கொண்டிருந்தார்.

விஜய்யின் ஆட்சி தமிழ்நாட்டில் நடக்கும் போது நாங்கள் தொடர்ந்தும் இவர்களுடன் உறவுகளை வைத்துக்கொண்டு, இலங்கையின் எதிர்கால அபிவிருத்தியில் ஒரு பங்கை பெற்றுக் கொள்வதற்கான வசதி இருக்கும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது இதனால் விஜய்க்கும் செங்கோட்டையனுக்கும் எமது நன்றியை கூறிக்கொள்கின்றோம். - என்றார். (எ)

# உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் ஒருவர் கைது

மட்டக்களப்பு, மே 09

கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள பெருவெளி வயல் பிரதேசத்தில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் சித்தாண்டியைச் சேர்ந்த 41 வயதுடைய ஒருவரை நேற்று முன்தினம் இரவு வயல் பகுதியில் வைத்து கைது செய்ததாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து குறித்த வயல் பகுதியில் உள்ள கொட்டகையை முற்றுகையிட்ட பொலிஸார் அங்கு சட்டவிரோதமாக மறைத்து வைக்கப்பட்ட உள்ளூர் தயாரிப்பான சிறிய ரக துப்பாக்கி ஒன்றை கைப்பற்றியதுடன் சித்தாண்டியைச் சேர்ந்த 41 வயதுடைய விவசாயி ஒருவரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை ஏறாவூர் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# வங்கி துறையில் நம்பிக்கை இழப்பு: பயங்கரவாதத்தை விட ஆபத்தானது

கொழும்பு, மே 09

வங்கித் துறையிலும் பணப் பரிமாற்றங்களிலும் காணப்படும் பாரிய பலவீனங்கள் காரணமாக மக்களிடையே நம்பிக்கை இல்லாமல்போயுள்ளது. இந்த நிலைமை பயங்கரவாதத்தை விடவும் பாரிய பேரழிவை ஏற்படுத்தக்கூடும் என்று பாராளுமன்ற உறுப்பினர் பைசர் முஸ்தபா எச்சரித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவசர கால சட்டத்தை நீடிக்கும் வர்த்தமானி மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஒரு நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு இணையாகப் பொருளாதாரப் பாதுகாப்பும் முக்கியமானது. என்றாலும் தற்போது அது பாரிய அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. அண்மைக் காலத்தில் திறைசேரியிலிருந்து 2.5 மில்லியன் டொலர் காணாமல் போனமை மற்றும் வங்கி அமைப்பில் நிலவும் பாதுகாப்பற்ற தன்மை பாரிய விடயமாகும்.

ஏனெனில் வங்கி அமைப்பும் திறைசேரியும் பாதுகாப்பாக இல்லாவிட்டால் வெளிநாட்டு முதலீட்டாளர்களை நாட்டுக்கு ஈர்க்க முடியாது. வங்கிகளைக் கண்காணிப்பதற்காக மத்திய வங்கி மாதத்திற்கு 50 முதல் 100 மில்லியன் ரூபாய் வரை அறவீடு செய்த போதிலும், வங்கித் துறையிலும் பணப் பரிமாற்றங்களிலும் காணப்படும் பாரிய பலவீனங்கள் காரணமாக மக்களிடையே நம்பிக்கை இல்லாமல் போயுள்ளது. இந்த நிலைமை பயங்கரவாதத்தை விடவும் பாரிய பேரழிவை ஏற்படுத்தக்கூடும் என்பதால், இது குறித்து ஆராய உடனடியாக விசேட செயலணி ஒன்றை அமைக்க வேண்டும். - என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## பெரும்பான்மையை...

இன்று பதவியேற்கவுள்ளார்.

எதிர்பார்க்கப்பட்ட பல அரசியல் நகர்வுகளுக்குப் பின், தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் விஜய் முதலமைச்சராகப் பொறுப்பேற்கிறார்.

இன்று முற்பகல் 11 மணியளவில் நேரு விளையாட்டு அரங்கில் இந்த பதவியேற்பு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

தமிழக ஆளுநரை நேற்று விஜய் மூன்றாம் முறையாக பெரும்பான்மையுடன் சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரியதைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு வெளியாகியு ள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சமீபத்தில் நடைபெற்று முடிந்த தேர்தலில் 108 தொகுதிகளைக் கைப்பற்றிய விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் ஆட்சி அமைப்பதற்கு 118 சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவு தேவைப்பட்டது.

ஏற்கனவே 5 உறுப்பினர்களைக் கொண்ட காங்கிரஸ் கட்சி ஆதரவு வழங்கியிருந்த நிலையில், மேலதிக ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி , கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) மற்றும் விடுதலை சிறுத்தைகள் ஆகிய கட்சிகளிடம் விஜய் ஆதரவு கோரி யிருந்தார்.

இதனடிப்படையில், நேற்று சென்னையில் நடைபெற்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) கட்சிகளின் மாநிலக் குழுக் கூட்டங்களின் முடிவில் இந்த ஆதரவுத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள் ளன.

2 சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி முதலில் தனது ஆதரவை அறிவித்த நிலையில், பின்னர் 2 உறுப்பினர்களைக் கொண்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் விஜய்க்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ளது.

தொடர்ந்து விடுதலை சிறுத்தைகள் கட்சி மற்றும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகியன தமது ஆதரவை அறிவித்துள்ளன.

இந்த நிலையில் 120 ஆசனங்களுடன் தமிழக வெற்றிக் கழகம் தமிழ் நாட்டில் ஆட்சியமைப்பதற்கான பெரும் பான்மையை பெற்றுள்ளது. (அ)

## மயிலிட்டியில்...

யுத்தம் முடிவடைந்து 17 வருடங்கள் கடந்த நிலையிலும் , அப்பகுதிகளில் இருந்து பாதுகாப்பு தரப்பினர் வெளியேறாத நிலையில், அவை உயர்பாதுகாப்பு வலயமாகவே காணப்படுகிறது.

இந்நிலையில் தமது காணிகளை விடுவிக்குமாறு பல வருடங்களாக காணி உரிமையாளர்கள் போராடி வரும் நிலையில் காணிகள் விடுவிக்கப்படாத நிலையில் காணிகளை விடுவிக்குமாறு பிரதி வெள்ளிக்கிழமைகளில் போராட்டங்களை முன்னெடுப்பதாக காணி உரிமையாளர்கள் முடிவெடுத்திருந்தனர். நேற்று மூன்றாவது வெள்ளிக்கிழமையும் அவர்கள் போராட்டத்தை முன்னடுத்தனர். (அ)

## சிறீலங்கன் எயார்...

சிறீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்கு எயார்பஸ் விமானங்களைக் கொள்வனவு செய்யும் கொடுக்கல் வாங்கலில், சுமார் 2 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலஞ்சமாகப் பெற்றார் என்று இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் அவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கபில சந்திரசேனவுக்கு கடந்த 05 ஆம் திகதி கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றம் பிணை வழங்கி இருந்தது.

5 லட்சம் ரூபா பெறுமதியான ரொக்க பிணையிலும், தலா 100 லட்சம் ரூபா பெறுமதியான மூன்று சரீரப் பிணைகளிலுமே அவர் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இவ்வாறு பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னர் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில், தலா 100 லட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணைகளை வழங்குவதற்காக தலா 15 ஆயிரம் ரூபா செலுத்தப்பட்டு வாடகைக்கு இருவர் அமர்த்தப்பட்டுள்ளனர் என்பது தெரியவந்துள்ளது.

இதனையடுத்து அவர் பிணை நிபந்தனைகளையும், நீதிமன்ற நம்பிக்கையையும் மீறியதால் அவரை உடனடியாகக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான பிடியாணை ஒன்றையும் பிறப்பிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு விடுத்த கோரிக்கையைப் பரிசீலித்த பின்னர், கொழும்பு பிரதான நீதிவான் கைது உத்தரவை நேற்று முன் தினம் பிறப்பித்திருந்தார்.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே அவர் சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்துள்ளார்.

அவர் தற்கொலை செய்துகொண்டுள்ளாரா அல்லது என்ன நடந்தது என்பது தொடர்பில் தகவல்கள் இன்னும் வெளியாகவில்லை. (அ)

## இலங்கையின்

இந்திய வர்த்தகத் துறையின் வர்த்தக புள்ளிவிவரங்களைப் பகிர்ந்து இந்த விளக்கத்தை அளித்துள்ள இலங்கையிலுள்ள இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா, 2025ஆம் ஆண்டில் இந்தியா - இலங்கை இடையிலான இருதரப்பு வர்த்தகப் புழக்கம் 6.4 பில்லியன் டொலர்களை எட்டியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மத்திய வங்கியின் தரவுகளை மேற்கோள் காட்டி, சீனா - இலங்கை இடையிலான வர்த்தகம் 2025 இல் 5.5 பில்லியன் டொலர்களை எட்டியுள்ளதாக சீனத் தூதரக செய்தித் தொடர்பாளர் யு ஜிங் கூறியதைத் தொடர்ந்து, தூதுவர் சந்தோஷ் ஜா இவ்வாறு பதிலளித்துள்ளார்.

அவர் தனது எக்ஸ் வலைத்தளப் பதிவில்,

இலங்கையின் மிகப்பெரிய வர்த்தகப் பங்காளியாக இந்தியாவே இன்னும் தொடர்கிறது. இந்திய வர்த்தகத் துறையின் தரவுகளின்படி, 2025 ஆம் ஆண்டில் இருதரப்பு வர்த்தகப் புழக்கம் 6,417 மில்லியன் டொலர்களாகும். இலங்கையின் ஏற்றுமதி 2020 இல் 689 மில்லியன் டொலர்களிலிருந்து, 2025 இல் 1,532 மில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளது.

2000ஆம் ஆண்டில் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்ததில் இருந்து, இலங்கையின் ஏற்றுமதி 30 மடங்குக்கும் மேலாக அதிகரித்துள்ளது. இலங்கையின் ஏற்றுமதிக்கான இரண்டாவது பெரிய நாடாக இப்போது இந்தியா விளங்குகிறது." எனத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## கோட்டாபயவுக்கு...

முழுவதும் ஏற்பட்ட வன்முறைகளின் போது வீடுகள் தீக்கிரையாக்கப்பட்ட அல்லது சேதமடைந்த முன்னாள் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சட்டவிரோதமான முறையில் நட்டஈடு வழங்கப்பட்டுள்ளதாக அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு வழங்கப்பட்ட நிதியை மீள அறவிடுமாறும், குறித்த நட்டஈடு வழங்கப்பட்டமை சட்டவிரோதமானது என அறிவிக்குமாறும் கோரி தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே, கோட்டாபயவுக்கு புதிய அறிவித்தலை அனுப்புமாறு உயர்நீதிமன்றம் மனுதாரர் தரப்பிற்கு கட்டளையிட்டது. (அ)

## யாழில்...

கட்ட அகழ்வு பணியின் 11ஆம் நாள் அகழ்வு பணிகள் நேற்று வெள்ளிக்கிழமை காலை ஆரம்பமானது.

அகழ்வுப் பணிகள் நடைபெற்று வந்த நிலையில், செம்மணிப் பகுதியில் திடீரென மதியம் மழை பொழிந்தமையால், அகழ்வு பணிகளுக்கு இடையூறு ஏற்பட்டது. அத்துடன் புதைகுழி பகுதிக்குள் வெள்ள நீரும் தேங்கத் தொடங்கியது.

அதனை அடுத்து நல்லூர் பிரதேச சபையின் கலிபவுசர்களை அழைத்து, அவற்றின் மூலம் வெள்ள நீர் வெளியேற்றப்பட்டது. இந்நிலையில் நேற்றைய அகழ்வுப் பணிகளின் போது, ஒரு என்புக்கூடு அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட என்புக்கூடுகளில் இரண்டு என்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அதன் அடிப்படையில் இதுவரையான காலப்பகுதியில் செம்மணி மனித புதைகுழியில், 260 மனித என்புக்கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவற்றில் 256 மனித என்புக்கூட்டு தொகுதி முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை இன்றைய தினம் சனிக்கிழமை 12ஆம் நாள் அகழ்வுப் பணிகள் அரை நாள் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டு உள்ளதாகவும், அதற்கு இடையில் மழை குறுக்கிட்டால் , நீதிமன்ற அனுமதியுடன் அகழ்வுப் பணிகளை தாற்காலிகமாக இடைநிறுத்தி, ஓரிரு கிழமைகளில் பின்னர் நீதிமன்று குறிப்பிடும் நாளொன்றில் மீள ஆரம்பிக்க உத்தேசித்துள்ளதாகவும் சட்டத்தரணி வி.எஸ் நிரஞ்சன் தெரிவித்துள்ளார். (அ)

## வியட்நாம்...

வியட்நாம் - இலங்கை உறவுகளில் ஒரு புதிய அத்தியாயத்தைக் குறிக்கும் வகையில் சுற்றுலாத் துறை, பாதுகாப்பு அலுவல்கள் தொடர்பு, மதம், சிவில், வர்த்தகம், போக்குவரத்து மற்றும் பொருளாதாரம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய துறைகள் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

அதன்படி, பொலிஸ் பயிற்சி மற்றும் விஞ்ஞான ஆராய்ச்சித் துறையில் ஒத்துழைப்புக்காக, வியட்நாமின் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் மக்கள் பொலிஸ் அகடமி மற்றும் இலங்கை தேசிய பொலிஸ் அகடமி ஆகியவற்றுக்கு இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம், வியட்நாம் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால ஆகியோரால் பரிமாறிக்கொள்ளப்பட்டது.

விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் ஒத்துழைப்புக்காக, இலங்கை விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சுக்கும் வியட்நாம் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம், வியட்நாமின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் மற்றும் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் கிரிஷாந்த அபேசேன ஆகியோரினால் பரிமாறிக்கொள்ளப்பட்டது.

வியட்நாமின் இன மற்றும் மத விவகாரங்கள் அமைச்சு மற்றும் இலங்கையின் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு ஆகியவற்றுக்கு இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தமானது, வியட்நாமின் இன மற்றும் மத விவகாரங்கள் அமைச்சர் மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி ஆகியோரால் பரிமாறிக்கொள்ளப்பட்டது.

வியட்நாமின் கலாசாரம், விளையாட்டு மற்றும் சுற்றுலா அமைச்சு மற்றும் இலங்கையின் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு ஆகியவற்றிற்கிடையிலான கலாசார ஒத்துழைப்பு குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம், வியட்நாமின் கலாசாரம், விளையாட்டு மற்றும் சுற்றுலா பிரதி அமைச்சர் ஹோ அன் பொங் மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி ஆகியோரால் பரிமாறிக் கொள்ளப்பட்டது.

வியட்நாமின் கலாசார, விளையாட்டு மற்றும் சுற்றுலா அமைச்சுக்கும், இலங்கையின் சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சுக்கும் இடையில் தகவல் மற்றும் தொடர்பாடல் துறையில் ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், வியட்நாமின் கலாசார, விளையாட்டு மற்றும் சுற்றுலா பிரதி அமைச்சர் ஹோ அன் பொங் மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சர் கலாநிதி கௌசல்யா ஆரியரத்ன ஆகியோரால் பரிமாறிக்கொள்ளப்பட்டது.

வியட்நாம் அரசாங்கத்தினால் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட 100 மெட்ரிக் தொன் உரத் தொகுதி, வியட்நாம் நிதி அமைச்சரால் விவசாய அமைச்சின் செயலாளர் டி பி. விக்ரமசிங்கவிடம் உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டது. (அ)

## கபில் சந்திரசேனவின்...

பகுதியில் அமைந்துள்ள வீட்டில் நேற்று காலை கபில சந்திரசேனவின் சடலத்தை பொலிஸார் மீட்டனர். குறித்த வீட்டின் அறையொன்றில் அவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாகக் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முற்பகல் கொழும்பு தடயவியல் மருத்துவ அதிகாரியும் அந்த இடத்துக்கு வருகை தந்திருந்தார். இச்சம்பவம் குறித்து கொள்ளுப்பிட்டி பொலிஸார் கோட்டை நீதவான் நீதிமன்றில் தெரிவிக்கையில், இதனை ஒரு சந்தேகத்திற்கிடமான மரணமாகக் கருதி மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகத் தெரிவித்தனர். இதற்கிடையில், சம்பவ இடத்தைப் பார்வையிட கோட்டை நீதவான் பசன் அமரசேனவும் வருகை தந்திருந்தார். (அ)

## யாழ்தேவி ரயில்...

6.40 மணிக்கு புறப்பட்டு வவுனியாவை 11.36 மணிக்கு கிளிநொச்சி நகரத்தை 12.51 மணிக்கும் யாழ்ப்பாணத்தை 1.59 மணிக்கும் வந்தடையும் ரயில், இறுதியாக 2.33 மணிக்கு காங்கேசன்துறையை சென்றடையும்.

அவ்வாறே எதிர்வரும் செவ்வாய்க் கிழமையிலிருந்து காங்கேசன்துறையில் ஆரம்பிக்கும் ரயில் சேவையானது யாழ்ப்பாணத்தில் 11.00 மணிக்கும் கிளிநொச்சியில் 12.14 மணிக்கும் வவுனியாவில் 1.35 மணிக்கும் சென்றடைந்து இறுதியாக கொழும்பு கோட்டையை 07.03 மணிக்கு சென்றடையும்.

இந்த ரயிலுக்கான கட்டடங்கள் சாதாரண கட்டணங்களாகவே அறவிடப்படவுள்ளன.

இவற்றைத் தவிர வழமை போன்று முதலாம் இரண்டாம் வகுப்பு ஆகியவற்றுக்கான ஆசனங்களை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளக்கூடியதாக இருக்கும் என யாழ்ப்பாண பிரதான ரயில் நிலைய பொறுப்பதிகாரி தி.பிரதீபன் தெரிவித்தார். (அ)

## குருநாகல் மாநகர...

ஒப்பந்தங்களை வழங்குவதற்காக பிரதி மேயர் இந்த இலஞ்சப் பணத்தைக் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த ஒப்பந்தத்தை வழங்குவதற்காக 30 இலட்சம் ரூபா மற்றும் மாதாந்தம் தலா 5 இலட்சம் ரூபா வீதம் கோரப்பட்டுள்ளதுடன், அதில் முதற் கட்டமான 30 இலட்சம் ரூபாவைப் பெற்றுக்கொள்ளச் சென்றபோதே பிரதி முதல்வர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பிரதி முதல்வரை இன்று சனிக்கிழமை புதுக்கடை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த உள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பாக குருநாகல் மாநகர சபைக்குத் தெரிவான இவர், பின்னர் சபையில் ஆட்சியமைப்பதற்காகத் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவு வழங்கியதையடுத்து பிரதி முதல்வராக பதவியேற்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# விஜய்க்கு உயிராபத்து!

## காங்கிரஸ் பொலிஸில் முறைப்பாடு

சென்னை, மே. 09

தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய்யின் உயிருக்கு ஆபத்து என பொலிஸ் நிலையத்தில் காங்கிரஸ் முறைப்பாடு அளித்துள்ளது.

விஜய்யை ஆட்சியமைக்க அனுமதிக்கும்படி ஆளுநருக்கு பல கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன.

ஆனால், பெரும்பான்மையை நிரூபித்தால் மட்டுமே ஆட்சியமைக்க முடியும் என தமிழக ஆளுநர் திட்டவட்டமாக மறுத்துவிட்டார்.

இந்நிலையில், விஜய்க்கு பா.ஜ.க. நெருக்கடி கொடுப்பதாகவும், அவரின் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகவும் பொலிஸ் நிலையத்தில் சென்னை மேற்கு காங்கிரஸ் தலைவரும் கவுன்சிலருமான டில்லிபாபு முறைப்பாடு அளித்துள்ளார்.

விஜய்க்கு இக்கட்டான சூழ் நிலையை ஏற்படுத்தும் நிலையில், அவரது உயிருக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இத்தகைய சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, அவருக்கும் விஜய்யுடன் கைகோர்த்திருக்கும் காங்கிரஸ் எம்.எல்.ஏக்களுக்கும் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் என குறிப்பிட்டுள்ளார். (அ)

# வடக்கில் தபால் சேவை குறைபாடுகளுக்கு தீர்வு

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ உறுதி



கொழும்பு, மே. 09

முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் தபால் சேவையில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கட்டம் கட்டமாக தீர்வு காணப்படும் என என சுகாதாரம் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற அமர்வின் போது வாய் மூல விடைக்கான வினாக்கள் வேளையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முல்லைத்தீவு மாவட்டத்தில் தபால் சேவையில் 142 ஊழியர்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், அங்கு 25 வெற்றிடங்கள் நிலவுகின்றன. அத்துடன் மன்னார் மாவட்டத்தில் 228 ஊழியர்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன், 32 வெற்றிடங்கள் உள்ளன.

அதேவேளை வவுனியா மாவட்டத்தில் 230 அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கள் உள்ளதுடன், 56 வெற்றிடங்கள் நிலவுகின்றன. 2025 டிசெம்பர் மாதத்தில் இருந்து வெற்றிடங்களை நிரப்பும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இங்கு தபால் போக்குவரத்தில் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி 10 லொறிகள் வழங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் போதுமான சேவைகள் வழங்கப்படுகின்றன-என்றார். (அ)

# தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றத் தவறியது அரசு!

## சபையில் சத்தியலிங்கம் எம்.பி. அதிருப்தி



கொழும்பு, மே. 09

"நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு வெறும் சட்டத்திருத்தங்கள் மட்டும் போதாது. தமிழ் மக்களின் அரசியல் வேட்கையை நிவர்த்தி செய்வதும், பொருளாதார உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதுமே உண்மையான தீர்வாகும்." என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடை பெற்ற அவசரகாலச் சட்ட நீடிப்பு மற்றும் குடிவரவு, குடிய கல்வு சட்டத் திருத்தங்கள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அவசரகாலச் சட்டத்தை கடந்த காலங்களில் மோசமாகப் பயன்படுத்தியவர்கள், இன்று அதன் நீடிப்பு பற்றிப் பேசுவது வேடிக்கையானது. இந்த அரசு பதவிக்கு வந்த போது இருந்த நம்பிக்கை, தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றாத காரணத்தால் இப்போது எம்மத்தியில் குறைந்துகொண்டு போகின்றது.

தாயகப் பிரதேசத்தில் சிறு அல்லது பாரிய முதலீட்டுத் திட்டங்கள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை. நிலத்தைப் பெறுவதில் உள்ள நிர்வாகச் சிக்கல்களால் முதலீட்டாளர்கள் வருடக்கணக்கில் அலைக்கழிக்கப்படுகின்றனர்.

இந்திய அரசு காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திக்காக வழங்கிய 2 ஆயிரத்து 200 கோடி ரூபா நிதி பயன்படுத்தப்படாமல், ஆரம்ப வேலைகள் கூடத் தொடங்கப்படாமல் இழுத்தடிக்கப்படுகின்றது.

திருகோணமலை எரிபொருள் சேமிப்பு வசதி தொடர்பாக இலங்கை, இந்தியா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் இடையே எட்டப்பட்ட உடன்படிக்கை இன்றுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை - என்றார். (அ)

# இலங்கை - வியட்நாம் இடையே இவ்வருடம் நேரடி விமானசேவை

கொழும்பு, மே. 09

வியட்நாம் எயார்லைன்ஸ் இந்த ஆண்டுக்குள் இலங்கைக்கும் வியட்நாமுக்கும் இடையில் நேரடி விமானச் சேவைகளை ஆரம்பிக்கவுள்ளதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நேற்று தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு உத்தியோகப் பூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள வியட்நாம் ஜனாதிபதி டோலாமுடன் இணைந்து நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டார்.

இரு நாடுகளுக்கிடையிலான இருதரப்பு வர்த்தகம் 2030ஆம் ஆண்டளவில் 1 பில்லியன் அமெரிக்க டொலரை எட்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, அனைத்துத் துறைகளிலும் இலங்கையுடனான உறவுகளை மேலும் வலுப்படுத்த வியட்நாம் விருப்பம் கொண்டுள்ளதாக அந்த நாட்டு ஜனாதிபதி டோ லாம் குறிப்பிட்டார். (அ)

# டிஜிற்றல் வருமானத்தை பெற விரைவில் வருகிறது 'பே பால்'

கொழும்பு, மே. 09

நாட்டில் 'பே பால்' (PayPal) சேவைகளை அறிமுகப்படுத்துவதற்கான ஆரம்ப கட்டப் பணிகள் மற்றும் தொழில்நுட்பக் கலந்துரையாடல்கள் மிகவும் வெற்றிகரமான மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக டிஜிற்றல் பொருளாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அவ்வமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-

இந்தச் சேவையானது இலங்கையின் டிஜிற்றல் தொழில்முனைவோர் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறைக்கு பல புதிய வாய்ப்புகளைத் திறந்துவிடும்.

குறிப்பாக, உலகச் சந்தையில் தமது சேவைகளை வழங்கும் திறமையான இளம் தலைமுறையினர் மற்றும் சுயதொழில் செய்பவர்கள், தமக்குக் கிடைக்கவேண்டிய வருமானத்தை நேரடியாகவும் பாதுகாப்பாகவும் நாட்டுக்குள் கொண்டு வருவதற்கு நிலவும் தடைகள் இதன் மூலம் நீக்கப்படும்.

தகவல் தொழில்நுட்ப ஏற்றுமதித்துறை மூலம் நாட்டுக்குக் கிடைக்கும் அந்நியச் செலாவணியின் அளவை அதிகரிப்பதற்கு இத்திட்டம் நேரடிப் பங்களிப்பை வழங்கும்.

இதன் மூலம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை வலுப்படுத்த முடியும் என அமைச்சு எதிர்பார்க்கிறது.

சிறு மற்றும் நடுத்தர அளவிலான டிஜிற்றல் தொழில்முனைவோர், உலகின் எந்தவொரு நாட்டிலும் உள்ள நுகர்வோருக்குத் தமது தயாரிப்புகளை எளிதாக விற்பனை செய்வதற்கான வாய்ப்பை இந்தச் சேவை வழங்கும்.

அத்துடன், இலங்கையில் நாணயப் பயன்பாடற்ற கொடுக்கல் வாங்கல்களைப் பிரபலப்படுத்தவும், நிதித் தொழில்நுட்பத் துறையில் புத்தாக்கங்களை ஊக்குவிக்கவும் இது ஒரு காரணியாக அமையும்.

சர்வதேச சமூகத்துடன் எந்தவிதமான தொழில்நுட்பத் தடைகளுமின்றி கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளக்கூடிய "டிஜிற்றல் வலுவூட்டப்பட்ட இலங்கை"யை உருவாக்குவதே அமைச்சின் இறுதி இலக்கு-என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# பெண்களுக்கு எதிரான சைபர் குற்றங்கள் சர்வதேச உதவியை நாடுகிறது இலங்கை!

கொழும்பு, மே. 09

பெண்களின் புகைப்படங்களைத் தவறாகப் பயன்படுத்தி முன்னெடுக்கப்படும் சைபர் குற்றங்களைக் கண்டறியவும், அவற்றைத் தடுக்கவும் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மற்றும் இலங்கை கணினி அவசர தயார்நிலை குழு ஆகியன சர்வதேச தொழில்நுட்ப உதவியை நாடியுள்ளன.

சபையில் பாராளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, கடந்த மூன்று ஆண்டுகளில் பெண்களுக்கு எதிரான சைபர் குற்றங்கள் கணிசமாக அதிகரித்துள்ளதை உறுதிப்படுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சமூக வலைத்தளங்களில் பெண்களுக்கெதிரான துஷ்பிரயோகங்களைத் தடுக்க அரசாங்கம் புதிய பொறிமுறைகளைக் கையாண்டு வருகிறது.

பேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராம் நிறுவனங்களுடன் இணைந்து, பெண்களை இலக்கு வைக்கும் பாலியல் துஷ்பிரயோகப் பதிவுகளைக் கண்டறிந்து நீக்க செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது.

பெண்களின் படங்களைச் சிதைத்தல் அல்லது தவறாகப் பயன்படுத்துதல் போன்ற குற்றங்களை முன்கூட்டியே கண்டறிய இது உதவும்.

பதிவாகும் குற்றங்களுடன் ஒப்பிடும்போது, அவை தீர்க்கப்படும் வேகம் மிகவும் குறைவாக இருப்பதை புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. இதனாலேயே, நவீன தொழில்நுட்ப நுணுக்கங்களைக் கையாள்வதற்கும் குற்றவாளிகளை விரைவாகக் அடையாளம் காண்பதற்கும் சர்வதேச அமைப்புகளின் தொழில்நுட்ப ஒத்துழைப்பு அவசியம்-என்றார். (அ)

# போலி அமெரிக்க டொலருடன் இரு வெளிநாட்டவர்கள் கைது!

கொழும்பு, மே. 09

போலி அமெரிக்க டொலர்களை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் இரண்டு வெளிநாட்டவர்களை ஹபராதுவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஹபராதுவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிலல்ல பகுதியில் உள்ள தங்குமிடம் ஒன்றில் தங்கியிருந்த இந்த இரண்டு வெளிநாட்டவர்களும், வணிக நிறுவனம் ஒன்றில் கொடுக்கல் வாங்கலுக்காக 400 போலி அமெரிக்க டொலரை வழங்கியதாகக் கிடைத்த முறைப் பாட்டுக்கு அமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் குறித்து ஹபராதுவ பொலிஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.05.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.